புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

===================================================================

# அன்னை மரியா அந்தாதியில் சமுதாயச் சிந்தனைகள்

===================================================================

**SCHOLAR**

LINCY.

Research Scholar,

Department of Tamil & Research Centre,

Govt. College Chittur, Palakkad – 678104

===================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

மானிடரின் மனதை தன்வயப்படுத்தும் கருவிகளாக இலக்கியங்கள் திகழ்கின்றன.மனித மனதில் தோன்றும் மறச்சிந்தனைகளைக் கலைந்து அற உணர்வை ஏற்படுத்தும் நோக்கை விதைக்கும் பங்கையும் இலக்கியங்கள் செய்துள்ளன. இலக்கியங்கள் இவ்வாறான பொதுமைக் கருத்துக்களை எடுத்தியம்புவது மட்டுமல்லாமல் மதபோதனைகளையும் செய்ய வல்லன. அவ்வகையில் கிறித்துவ மதத்தைப் பரப்பும் நோக்கில் பல இலக்கிய வகைகளைப் பின்பற்றி அரிய நூல்கள் தோன்றலாயின. அவ்வாறு கையாளப்பட்ட இலக்கிய வகைகளில் சிற்றிலக்கியமும் சிறப்பாக அமைந்துள்ளது. ஆதியும் அந்தமும் ஆகிய பரம்பொருளாம் இறைவனைப்போல அந்தம் ஆதியாக அமையும் அந்தாதி வகையையும் கிறித்தவ மதப்பரவலுக்குக் கருவியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வந்தாதி வகையில் தோன்றிய முதல் கிறித்தவ அந்தாதி நூல் வீரமாமுனிவர் இயற்றிய `அன்னை அழுங்கல் அந்தாதி` என்பதாகும். அவ்வழிப்பட்டதாய் தோன்றி மலர்ந்ததே ஆசிரியர் ஞா.குழந்தைசாமி அவர்களின் `அன்னை மரியா அந்தாதி`. கிறித்துவ மதத்தைச் சார்ந்த நூலாக இருந்த போதிலும் இந்நூலகத்து மக்களிடையே நிம்மதியான வாழ்வு மலரும் நோக்கில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை ஆய்ந்துரைக்கும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**முன்னுரை**

*காலங்களின் பதிவுகளை வெளிப்படுத்தி அவற்றை நிலைநிறுத்த உதவுவன இலக்கியங்கள். அறம்,பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப்பொருள்களை உணர்த்தி அவற்றின் வாயிலாக மக்களை நல்வழிப்படுத்த உதவும் தன்மை கொண்டவை பேரிலக்கியங்கள் என்பர். சிற்றிலக்கியங்களாவன உறுதிப்பொருள்கள் நான்கனுள் ஒன்றோ சிலவோ குறைந்தவையாய் கற்பனை, தெய்வப் போற்றல், தனிமனிதப் போற்றல் முதலானவற்றிற்கு இடம் தருவனவாய் அமையும். சிற்றிலக்கியம் என்பதனை வடமொழியில் `பிரபந்தம்` என்ற சொல்லால் குறிப்பர். பிரபந்தம் என்பதற்கு நன்கு கட்டப்பட்டது என்று பொருள். தமிழ்ச் சூழலானது சோழர், பாண்டியர் ஆட்சிக் காலங்களுக்கு பிறகு பல திருப்பங்களை சந்தித்தது. அதற்குப்பின் தோற்றம் குறித்த விஜயநகரப் பேரரசு, நாயக்கர் ஆட்சி காலங்கள் தனிநபர் போற்றல் நிலைக்கு தமிழ் புலவர்களின் படைப்புகளை மாற்றியது. இச்சூழலால் காப்பியங்களாகிய பேரிலக்கியங்கள் தோற்றம் கொள்ளாமல் சிற்றிலக்கியங்கள் உற்பவிக்கலாயின. எனவேதான் நாயக்கர் காலம் `சிற்றிலக்கிய காலம்` என்று அழைக்கப்படுகிறது. சிற்றிலக்கியங்களின் இலக்கணத்தை பாட்டியல் நூல்கள் கூறுகின்றன. சிற்றிலக்கிய வகைகளின் எண்ணிக்கையில் பல கருத்து வேறுபாடுகளைப் பாட்டியல் நூல்கள் முன்வைக்கின்றன. ஆனால், சிவந்தெழுந்த பல்லவன் உலா, சதுரகராதி, பிரபந்த மரபியல், பிரபந்த தீபிகை போன்ற நூல்கள் சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு வகை என்ற ஒத்த கருத்தை முன்வைக்கின்றன. மேலும் காலச்சூழலுக்கு ஏற்ப புதிய இலக்கிய வகைகள் தோன்றும் என தொல்காப்பியர் குறிப்பிடுவதனை*

“விருந்தே தானும்
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”[1]

*என்ற நூற்பாவில் காணலாம். `விருந்து` என்ற சொல்லுக்குப் புதுமை என்பதுபொருள். புதிதாக தோன்றுகின்ற செய்யுள் வகை வடிவங்கள் எல்லாவற்றையும் விருந்து என்ற அமைப்பில் அடக்கலாம். கிறித்துவ மதப்பரப்புதலை தமிழ்ச் சமுதாயத்தில் பரப்ப வேண்டும் என்ற நோக்கம் கொண்ட கிருத்துவப் பாதிரிமார்களும், கிறித்துவத் தொண்டர்களும் தமிழைக் கற்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.மக்களிடையே மதப்பரப்புதலை ஏற்படுத்த இலக்கியங்கள் உதவும் என்பதை நன்கு அறிந்து கொண்டனர். எனவே, இவ்விலக்கியங்களின் அமைப்பு முறையினைப் பின்பற்றி பல நூல்களை உருவாக்க முன்வந்தனர். அதற்கான கருவியாக அகம்,புறம், பக்தி எனப் பல பிரிவுகளைக் கருவியாகக் கொண்டு அமைந்த சிற்றிலக்கியங்களையும் பயன்படுத்த முன்வந்தனர். இவ்வாறாக இலக்கிய நயமும், கருத்துச் செறிவும் பெற்று இலக்கியத்தரம் மிகுந்தவையாக பல கிறித்துவ சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. அந்நூல்களுக்கான கருப்பொருளாக திருவிவிலியத்திலுள்ள நிகழ்வுகள், நீதிபோதனை கருத்துக்கள், புனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் போன்றவற்றைத் தேர்வு செய்தனர்.*

*எழுத்தின் வாயிலாக கற்கக் கூடிய வசதிகள் குறைவாக இருந்த காலகட்டத்தில் பாடல்களை நினைவில் நிறுத்த எளிமையாக பயன்படுத்த `அந்தாதி` என்ற அமைப்புமுறை செய்யுள் இலக்கியங்களில் பின்பற்றப்பட்டது. அந்தாதி என்ற வடசொல் அந்தத்தை ஆதியாக உடையது என்ற பொருளைத் தரும். ஒருபாடலின் அந்தத்தை அடுத்த பாடலினுடைய ஆதியாக அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும். எழுத்து, அசை, சீர், சொல், அடி இவற்றில் ஏதேனும் ஒன்று அடுத்த பாடலின் துவக்கமாக வரும்படிப் பாடுவது அந்தாதி அமைப்புமுறை. பக்திக் காலத்தில் தழைத்தோங்கத் துவங்கியது இவ்வந்தாதி இலக்கியம். காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதியே இவ்வகையில் தோன்றிய முதல் இலக்கியம் என்பர். காரைக்காலம்மையார் இறைவன்பால் கொண்ட அன்பின் நிமித்தம்*

அடைந்த இன்பத்தை பிறருக்கு அறிவுறுத்துவதாகவும், உலக மாந்தருக்கு அறிவுரை கூறுவதாகவும், பக்தர்கள்மீது இறைவன் பொழியும் அருட்கொடைகளை இயம்புவதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. பாடலை நினைவில் வைக்கவல்ல அந்தாதி இலக்கிய வகையினை தனக்கேற்ற அமைப்பாகக் கண்ட ஆசிரியர் ஞா.குழந்தைசாமி அவர்கள் `அன்னை மரியா அந்தாதி` என்ற நூலை இயற்றியுள்ளார். இயேசுவின் தாயாம் அன்னை மரியாவைக் குறித்து விவிலியத்தில் காணப்படும் தகவல்கள், அன்னையின் பெயரில் கோவில் அமைந்துள்ள ஊர்கள், அன்னை ஆற்றிய அற்புதங்கள், பக்தர்களுக்கு அன்னை அளிக்கும் கொடைகள், மானிடரின் சமுதாய அமைப்பிற்கான வழிமுறைகள் போன்றவற்றை இந்நூல் உட்பொருளாகக் கொண்டுள்ளதைக் காணலாம். இதன் மையப்பொருளாக அமைவது அன்னையின் புகழ் பெருமையினை உலகறியச் செய்தல் என்பதாகும். இவ்வாறான அமைப்பு முறையில் அந்தாதி முறையினைப் பின்பற்றியதாக அன்னை மரியா அந்தாதி திகழ்கிறது.

கிறித்துவ இலக்கியங்கள் பெரும்பாலும் அறக்கருத்துக்களையும், நீதிபோதனை சிந்தனைகளையும் மக்கள் மத்தியில் விதைத்து சமுதாயச் சீர்திருத்தக் காரணிகளாய் அமைகின்றன. இவ்விதத்தை அன்னை மரியா அந்தாதியிலும் காணலாம். கிறித்துவ சமயத்தைச் சார்ந்த நூலாக இருந்தாலும் மதம் தொடர்பான தகவல்கள் மட்டுமன்றி பொதுவான சமூக நோக்கு கொண்ட செய்திகளும் நூலகத்து உள்ளது. அதனை ஆராயும் விதமாக `அன்னை மரியா அந்தாதியில் சமுதாயச் சிந்தனைகள்` என்னும் தலைப்பில் நூலகத்து காணப்படும் மானிடரிடையே இருக்க வேண்டிய ஒற்றுமை, பிறர் நலன், ஆன்மாவின் இன்றியமையாமை, நிலையற்ற உலகு, ஆதரவற்றோர்க்கு அடைக்கலம், தீயோரை இறைவன் தண்டிக்கும் முறை, சாதி மத வேறுபாடின்றி வாழவேண்டும் என்ற சமத்துவச் சிந்தனை போன்ற சமுதாயச் சிந்தனைகளை ஆராயும் வகையில் இவ்வாய்வின் கருதுகோள் அமைந்துள்ளது.

**ஆய்வு நெறிமுறைகள்**

ஆய்விற்காக பகுப்புமுறை, விளக்கமுறை, ஒப்பீட்டுமுறை போன்ற ஆய்வு நெறிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன. அன்னை மரியா அந்தாதியில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளை வகைபடுத்துவதற்காக பகுப்புமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூலில் இடம் பெற்றுள்ள சமுதாயச் சிந்தனைகளை தெளிவுபடுத்துவதற்காக விளக்கமுறை ஆய்வு கையாளப்பட்டுள்ளது. ஒப்பீட்டு முறையானது அன்னை மரியா அந்தாதியில் காணப்படும் சமுதாயச் சிந்தனைகளைப் பிற இலக்கியங்களுடன் ஆராய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஒற்றுமை**

`தனிமரம் தோப்பாகாது` என்பது உண்மையே. மானிடரிடையே ஒற்றுமை மனநிலை மிக அவசியமானது. ஒருவருக்கொருவர் அன்பை அடிப்படையாகக் கொண்டு நீடித்த உறவில் நிலைத்து வாழ வேண்டும் என்பதையே அனைத்து மதங்களும் வலியுறுத்துகின்றன. இதனை, ‘‘அன்பையும் அறத்தையும் அறிவுறுத்தி மனிதரிடத்தில் உறங்கிக் கிடக்கும் மிருக உணர்ச்சியைப் போக்கி மனித நேயத்தை வளர்ப்பன’’[2] மதங்கள் என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. அதுபோலவே `அன்பு` என்பதை முழுமையான மையப்பொருளாக பின்பற்றி கிறித்துவ மதமும் திகழ்கிறது. இக்கருத்தை வலியுறுத்தும் விதமான தகவல்கள் அன்னை மரியா அந்தாதியிலும் நாம் காணலாம்.

‘‘கொண்டு கொடுத்து குவலயம் வாழ்ந்திடக்
கொள்கை வகுத்திடுவாய் – ஒன்றாய்
உண்டு உறங்கி உறவை வளர்த்து

*உலகில் வாழ்ந்திடுதல் – நீ*
*கண்டு களித்து கவலை விடுத்து*
*காரிய மாற்றிடுவாய்''*[3]

*அனைவரும் சமாதானமாய் வாழவும் பிறரை எள்ளி நகைத்திடாமல் மன்னித்து மறக்கவும் துணைபுரிவதற்காக அன்னையிடம் ஆசி வேண்டுவதாக ஆசிரியர் மொழிவதை இங்கு உணரலாம். கல்வி கற்றோர், கல்லார் என்ற வேறுபாடின்றி மனிதர் என்ற மனநிலையுடன் வாழ முயற்சிப்பது மனித வாழ்வை சிறப்புற வைக்கும் என்பதை இந்நூலில் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். விரோத மனோபாவம் உடையவர்களாய் முகம் சுளித்து வாழ்வை மேற்கொள்ளாமால் மனமகிழ்வோடு பிறரின் மனநிலைகளை ஏற்று இயேசு மொழிந்த வார்த்தைகளாகிய ''தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை''*[4] *என்பதை மாந்தரின் மனதில் பதிய வைப்பதற்கான முயற்சியை ஆசிரியர் மேற்கொண்டுள்ளார். தேரில் வைத்து அலங்காரம் செய்யப்பட்டு ஊர்வலமாகப் போகும்போது ஊரில் உள்ள மானிடரின் ஒற்றுமை கண்டு மனநிறைவு அருள்பவளாக அன்னையைக் காண்பிக்கின்றார்.*

***பிறர்நலன்***

*எம்மதத்தைச் சார்ந்தோராயினும், நார்த்தீகராயினும் தெய்வத்தின்மீதோ, இயற்கையின்மீதோ, அறிவியலின்மீதோ தன்னைவிட உயர்ந்த சக்தி ஒன்று உண்டு என்பதை நம்பியவர்களாகக் காணப்படுகின்றனர். ஏதேனும் ஒரு மதக்கொள்கையைப் பின்பற்றுவோர் ஆயின் ''ஆலயம் தொழுவது சாலவு நன்று''*[5] *என்ற கொன்றை வேந்தனில் கூறப்பட்டுள்ளதுபோல இறையருளை உணர்ந்தவர்களாய் தன் உடலாம் ஆலயத்தில் இறைவனை இருத்தி அவரது கட்டளைகளைப் பின்பற்றி வாழ முயற்சிப்பர். அவ்இறைவனை தனது துயருறும் வேலையில் உதவ அழைப்பர். ஆசிரியர் ஞா.குழந்தைசாமி அவர்களும் அவ்வண்ணமே மாந்தரின் நன்னல வாழ்வு சிறப்புற அமைய அன்னையின் உதவியை வேண்டுவதாகப் பாடியுள்ளதை கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.*

*''ஆற்றில் அடித்துச் செல்லும் சருகுபோல்*
*அல்லறும் ஏழை – நாளும்*
*சோற்றுக் கில்லா துன்ப நிலையைச்*
*சடுதியில் சரிசெய்வாய்''*[6]

*தான், எனது என்ற எண்ணம் கொண்டவர்களாய் தனக்கு மட்டும் ஆசீர்வாதம் வேண்டும் என்ற சுயநலத்தைக் களைந்தவர்களாய், அனைவரும் ஒன்றே என வாழ்வது நன்று.*

*''அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியர் பிறர்க்கு''*[7]

*என்று அன்பை அடிப்படையாகக் கொண்டோர் பிறர் நலனில் அக்கறை உடையவராய் திகழ்வர் என்பதை குறள் இயம்புகிறது. இதனை ஒத்த முறையில் தன்னைப்போல பிறரையும் நேசிக்க வேண்டும் என்ற பிறர்நலக் கொள்கையை வெளிப்படுத்துவதை நாம் நாம் காணலாம்.*

***ஆன்மாவின் இன்றியமையாமை***

*உடலாம் தோற்றத்தில் சிக்கி அல்லல்பட்டுக்கொண்டிருக்கும் ஆன்மாவின் நிலை மிக துன்பகரமானது. மனம்போன போக்கில் வாழ்வது என்பது மிக எளிமையான காரியம். ஆனால், எவ்வுயிர்க்கும் யாதொரு தீங்கும் விளைவிக்காமல், 'ஆமை தனது உறுப்புக்களை*

ஓட்டினுள் மறைப்பது போல' ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வது என்பது சற்று கடினமானதே. இவ்வுலகைச் சார்ந்த சிற்றின்பங்களின்மீது மோகம் கொண்டு ஆன்மாவை அசுத்தப்படுத்தாமல் வாழ்வது அனைவராலும் இயலாதது. அவ்வாறு மனத்தூய்மை காத்து வாழ தன்னடக்கம் மிக அவசியமானது.

“உடைமை பெரிதென உயிரைச் சிறிதென
உலகில் வாழ்வார்க்கு – அவர்
மடமை உணர்த்தி மதியை உயர்த்தி
மாயம் செய்பவளே”[8]

எனக்கூறி செல்வந்தர்களாய் வாழ்ந்தால்தான் பிறர் நம்மை மதிப்பார்கள். எனவே, பணம் சம்பாதிப்பதற்கு எவ்வழியை வேண்டுமானாலும் கையாலளாம் என்ற எண்ணம் மனித சமுதாயத்தில் நிலவியுள்ளதை சுட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. நன்மையா? தீமையா? என்ற கேள்வியைத் தன்னுள்ளே எழுப்பாமல் பாவத்தைத் தவறு என சற்றும் சிந்திக்காமல் தன் உடன்பிறப்புபோல் கூடவே வைத்துக் கொள்வார்கள் அநேகர். “மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக்கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாரெனில் அவருக்குக் கிடைக்கும் பயன் என்ன?”[9] என்பதை உணர்ந்தவராக ஆன்மாவின் சொல்கேட்டு எத்தீங்கும் புரியாமல் வாழ்வது அவசியம் என்பதை அன்னை மரியா அந்தாதி உணர்த்துகிறது.

**நிலையற்ற உலகு**

தமிழில் உள்ள உயிர், மெய் என்னும் எழுத்துக்கள் இணைந்தே பிற எழுத்துக்களுக்கு உயிர் நல்குகிறது. அதுபோலவே, உயிர், உடல் என்ற பகுப்பு முறையை நாம் மனிதரிடமும் பொருத்திப் பார்க்கலாம். புறத்தொற்றத்தை வெளிப்படுத்தி செயல்படக்கூடிய உடல் என்பது உயிரை அடிப்படையாகக் கொண்டே இயங்கக்கூடியது. உயிர் இல்லையென்றால் உடலானது 'பிணம்' என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும்.

“நார்த்தொடுத்து ஈர்க்கிலென் நன்றாய்ந்து அடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டும்
கூத்தன் புறப்பட்டக் கால்”[10]

என்ற நாலடியாரில் உள்ள பாடல் உயிர் இழந்த உடல் எதனையும் அறியாது. எனவே, உயிரோடிருக்கும் போதே நற்செயல்கள் செய்தால்தான் நிலையான நீடிய வாழ்விற்கு வழிவகுக்கும் என்பதை உணரலாம். இதனை ஒத்த கருத்தையே,

“நேற்று இருந்தார் இன்றில்லை என்றும்
நிலையற்ற உலகினிலே”[11]

என்று அன்னை மரியா அந்தாதி மொழிகிறது. நாம் செய்யும் அனைத்து செயலையும் மறு உலக வாழ்வை மனதில் கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டும் என்னும் கருத்தை இப்பாடல் வாயிலாக ஆசிரியர் உணர்த்துகிறார்.

**ஆதரவற்றோருக்கு அடைக்கலம்**

உலகில் எந்த ஒரு உயிரும் தனியாக வாழ முடியாது. ஒன்றைச் சார்ந்துதான் மற்றொன்று வாழ முடியும் என்பது உலக நியதி. உணவுச் சங்கிலி இதற்குத் தக்க சான்றாக அமைந்துள்ளது.இதில், ஒவ்வொன்றும் பின்னிப்பிணைந்து அமைந்திருப்பதைக் காணலாம்.ஏதேனும் ஒன்று அழிந்தால் அச்சங்கிலி மொத்தமாகவே பாதிப்பிற்கு உள்ளாகும். இதுபோலவே நாமும் ஒருவரை ஒருவர் அனுசரித்து, ஆதரித்து வாழ வேண்டும் என்பதை

*அன்னை மரியா அந்தாதி உணர்த்துகிறது. பிறரின் தேவையை அறிந்து "பண்பு எனப் படுவது, பாடறிந்து ஒழுகுதல்"[12] என்ற வரிகளுக்கு ஏற்ப செயல்படுவதே சிறந்த குணமாகும். மானிடரிடையே உயர்ந்தோர் – தாழ்ந்தோர், ஏழை – பணக்காரன், கல்வி கற்றோர் – கல்லார் இது போன்ற பலவகையான ஏற்றத்தாழ்வுகளை நாம் காண்கிறோம். இன்றைய சூழலிலும் 'மகனை வளர்த்த தாய் முதியோர் இல்லத்திலே; மகன் வளர்க்கும் நாய் கட்டில் மெத்தையிலே' என்றநிலை உள்ளது. மகனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற தாயின் அவல நிலையானது மிகக் கொடியது. அதனை*

*"பெற்ற பிள்ளையைப் பேணி வளர்ப்பார்*
*பெற்றவளை மறந்தால் – அவள்*
*உற்ற துன்பம் உறுவது தாயின்*
*உள்மனம்தான் அறியும்"* [13]

*என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். தேற்றுவதற்கு எவரும் இன்றி தவித்துக்கொண்டிருக்கும் உயிர்களது தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டுமாய் அன்னையிடம் வேண்டுவதாகவும் சில பாடல்களை அமைத்திருப்பது மனித மாண்பை மக்களிடையே உணர்த்துவதாக காணப்படுகிறது.*

***தீயோரை தண்டிப்பது***

*உரிமைகளுக்காகப் போராடும் மனித சமுதாயம் பல நிலைகளில் தனது கடமைகளை மறந்துவிடுவதை நாம் காண நேரிடுகிறது. கடமையைச் செய் பலனை எதிர் பார்க்காதே, அது தானாக வந்தடையும் என்ற எண்ணமுடையோராக சிலர் காணப்படுகின்றனர். எனினும், கடமை உணர்வே சற்றும் இல்லாது 'நான் பிடித்த முயலுக்கு இரண்டு கொம்பு' என்ற எண்ணமுடையோரும் வாழ்கின்றனர். கடமைகளை செய்யத் தவறுவது குற்றம் என்பதை திருவிவிலியத்தில், இயேசு மோசேவிற்கு அளித்த பத்துக் கற்பனை வாயிலாக உணரமுடிகிறது. நாம் செய்யும் தீவினைகளுக்கு தண்டனை நிச்சயம் உண்டு என்பதை "கடவுள் நடுநிலை தவறாத நீதிபதி; நாள்தோறும் அநீதியைப் பொறுத்துக் கொள்ளாத இறைவன்"[14] என்ற விவிலிய வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன. இதனை ஒத்த தன்மையதாய்*

*"தீயவர்க்கு அச்சமே தெய்வீக உச்சமே"*[15]

*என்னும் பாடல் வரிகளில் அன்னை மரியா அந்தாதி விளக்குகிறது. 'மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும்' என்ற பழமொழிக்கு ஏற்ற கருத்தினை உணர்த்துவதாக இவ்வரி அமைந்துள்ளது. குற்றம் செய்த ஒருவர் இறைவன் முன்பாகவோ, சான்றோர் முன்பாகவோ முழுமனச் சுதந்திரத்துடன் நிற்க முடியாது என்பதனை உணர்த்துவதாக கருத்துக்கள் அன்னை மரியா அந்தாதியில் காணப்படுகிறது.*

***எம்மதமும் சம்மதம்***

*மாந்தர் அனைவரும் ஒரேகுலம் என்ற நோக்குடையவராய் அனைத்து மதத்தினரையும் ஏற்று வாழ்தல் சிறப்பு என்பதனை அன்னை மரியா அந்தாதி இயம்புகிறது. இந்து, இஸ்லாம், கிறித்தவர் என்று மதவேறுபாடு கொண்டு கலக்கமுறும் நிலையில் மனிதர் அவதிப்படுகின்றனர். கடவுளை ஒருவராகக் கொள்ளும் நிலையின்றி மனித சாதி என்ற ஒரு சாதிக்குள் ஏற்படும் பிணக்குகளை முறியடிக்கும் விதமாக,*

*"எம்மா நிலமும் எம்மதத் தாரும்*
*ஏற்றமுறச் செய் அம்மா"*[16]

*என அன்னையை வேண்டுகிறார் ஆசிரியர். இறைவன்மீது நம்பிக்கை உடையோர், நம்பிக்கை அற்றோர் யாவரும் இறைவன்பால் திரும்பிவந்து சேர வேண்டும் என்ற நற்சிந்தையை எடுத்துரைப்பதாகவும் பாடல் அமைந்துள்ளது.*

*"ஆத்திகர்க் கருள்நலம் தந்து தந்து*
*ஆசீர் வதிப்பவளே- அந்த*
*நாத்திகர் மனமும் நாடிடும் வண்ணம்*
*நன்மை செய் விண்ணரசி"*[17]

*என்ற வரிகளில் அக்கருத்தினை வெளிப்படுத்துகிறார். "தம் கண்முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது"*[18] *என்னும் இறைவனது வார்த்தையை மக்களுக்கு எடுத்துரைத்து மனித சமுதாயத்தை மேன்மைப்படுத்த முற்படுவதான தகவல்களை அன்னை மரியா அந்தாதியில் காணலாம்.*

**முடிவுகள்**

*அன்னை மரியா அந்தாதி கிறித்துவ மதத்தைச் சார்ந்த நூலாக இருந்தபோதிலும், மனிதகுல மேம்பாட்டிற்கான கருத்தாக்கச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் நூல் என்பதனை உறுதிப்படுத்துகிறது. இந்நூலில் காணப்படும் கருத்தாக்கச் சிந்தனைகளான அன்பு, ஒற்றுமை, பிறர் நலன், மன்னிப்பு, கனிவு, நன்னடத்தை, சமத்துவம் ஆகியவற்றின் வாயிலாக ஆராய்ந்து தெளிவுபடுத்த முடிகிறது. இவ்வாறு சமுதாயத்தில் நிலவி வரும் சீர்கேடுகளை சரிசெய்யும் வகையிலும் இந்நூலினை ஆசிரியர் படைத்துள்ளார் என்பது உறுதிசெய்யப்படுகிறது. நமது வாழ்வியல் காரணிகளை ஆதாரங்களாகக்கொண்டு, மனித நேயத்தை வளர்த்து சமுதாய மேன்மையை அடைதல் வேண்டும் என்பதை இந்நூல் உணர்த்துகின்றது.*

**மேற்கோள் விளக்கம்**

*1. பேராசிரியர் உரை ,தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா-551*

*2.ஆரோக்கியசாமி.இர, இக்கால கிறித்தவ தமிழ் இலக்கியம்,பக்கம்-70*

*3.குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி,பாடல்-46*

*4.திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, லூக்கா-23:34*

*5.வேங்கடசாமி நாட்டார்.ந.மு (உரையாசிரியர்), கொன்றை வேந்தன், பாடல்-2*

*6.குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி,பாடல்-106*

*7.பரிமேலழகர் (உரையாசிரியர்), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், குறள்-72*

*8. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி,பாடல்-33*

*9. திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, மத்தேயு-16:26*

*10.ஸ்ரீசந்திரன்.ஜே. (உரையாசிரியர்), நாலடியார் மூலமும் தெளிவுரையும்,பாடல்-26*

*11. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி,பாடல்-106*

*12. புலியூர்க் கேசிகன் (உரையாசிரியர்), கலித்தொகை, நெய்தற் கலி, பாடல்-16:8*

*13. குழந்தைசாமி.ஞா, அன்னை மரியா அந்தாதி,பாடல்-114*

*14.* திருவிவிலியம் *(பொது மொழிபெயர்ப்பு), பழைய ஏற்பாடு, திருப்பாடல்கள்-07:11*

*15.* குழந்தைசாமி*.*ஞா*,* அன்னை மரியா அந்தாதி*,*பாடல்*-104*

*16.* குழந்தைசாமி*.*ஞா*,* அன்னை மரியா அந்தாதி*,*பாடல்*-133*

*17.* குழந்தைசாமி*.*ஞா*,* அன்னை மரியா அந்தாதி*,*பாடல்*-122*

*18.* திருவிவிலியம் *(பொது மொழிபெயர்ப்பு), புதிய ஏற்பாடு, 1*யோவான்*-04:20*

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்**


1. *ஆரோக்கியசாமி. இர, இக்கால கிறித்தவ தமிழ் இலக்கியம், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1983.*
2. *குழந்தைசாமி. ஞா, அன்னை மரியா அந்தாதி, அன்னை பதிப்பகம், திருச்சிராப்பள்ளி, 2011.*
3. *திருவிவிலியம் (பொது மொழிபெயர்ப்பு),டி.என்.பி.சி.எல்.சி, திண்டிவனம், 12ஆம் பதிப்பு,2001.*
4. *பரிமேலழகர் (உரையாசிரியர்), திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை, முதல் பதிப்பு,2019.*
5. *புலியூர்க் கேசிகன் (உரையாசிரியர்), கலித்தொகை, பாரி நிலையம், சென்னை, 9ஆம் பதிப்பு, 2016.*
6. *தொல்காப்பியம் (பேராசிரியர் உரை), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு, 2003.*
7. *வேங்கடசாமி நாட்டார்.ந.மு (உரையாசிரியர்), கொன்றை வேந்தன்- உலக நீதி- மூதுரை, சாரதா பதிப்பகம், சென்னை, ஆறாம் பதிப்பு, 2015.*
8. *ஸ்ரீசந்திரன். ஜே. (உரையாசிரியர்), நாலடியார் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம்.*